ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:



## மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் அருளிச் செய்த தமிழ் வேதமாகிய நாலாயிர திவ்ய ப்ரபந்தம்

### ஆண்டாள் அருளிச் செய்த

# நாச்சியார் திருமொழி



**Second Edition: 2009**
First edition: 2005

Copyright © 2001-2009
All Rights Reserved

**நாச்சியார் திருமொழி**

**நாச்சியார் திருமொழித் தனியன்கள்** ........ 3
**தையொரு திங்களும்** ........ 3
**நாமமாயிரம்** ........ 5
**கோழியழைப்பதன்** ........ 7
**தெள்ளியார் பலர்** ........ 8
**மன்னு பெரும்புகழ்** ........ 10
**வாரணமாயிரம்** ........ 12
**கருப்பூரம் நாறுமோ** ........ 14
**விண்ணீல மேலாப்பு** ........ 15
**சிந்துரச் செம்பொடி** ........ 17
**கார்க்கோடல் பூக்காள்** ........ 18
**தாமுகக்கும்** ........ 20
**மற்றிருந்தீர்கட்கு** ........ 21
**கண்ணனென்னும்** ........ 24
**பட்டி மேய்ந்து** ........ 25

## ஆண்டாள் அருளிச் செய்த
## நாச்சியார் திருமொழி

### நாச்சியார் திருமொழித் தனியன்கள்

### திருக்கண்ணமங்கையாண்டான் அருளிச் செய்தது

அல்லிநாள் தாமரை மேல் ஆரணங்கின் இன்துணைவி *
மல்லி நாடாண்ட மடமயில் * - மெல்லியலாள்
ஆயர்குல வேந்தன் ஆகத்தாள் தென் புதுவை
வேயர் பயந்த விளக்கு

### முதலாவது வானமாமலை ஸ்வாமி அருளிச் செய்தது

[1]கோலச் சுரிசங்கை மாயன் செவ்வாயின் குணம் வினவும்
சீலத்தனள் * தென் திருமல்லி நாடி * செழுங்குழல் மேல்
மாலைத் தொடை தென்னரங்கருக்கு ஈயும் மதிப்புடைய
சோலைக் கிளி * அவள் தூய நற்பாதம் துணை நமக்கே

## ஆண்டாள் அருளிச் செய்த
## நாச்சியார் திருமொழி 1: தையொரு திங்களும்
### (கண்ணனோடு கூடும்படி காமனைத் தொழுதல்)

504 ***** தையொரு திங்களும் தரை விளக்கித் *
தண் மண்டலமிட்டு மாசி முன்னாள் *
ஐய நுண்மணற் கொண்டு தெருவணிந்து *
அழகினுக்கு அலங்கரித்து அனங்க தேவா! **
உய்யவுமாங்கொலோ என்று சொல்லி *
உன்னையும் உம்பியையும் தொழுதேன் *
வெய்யதோர் தழல் உமிழ் சக்கரக் கை *
வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே 1

505 வெள்ளை நுண்மணற் கொண்டு தெருவணிந்து *
வெள்வரைப்பதன் முன்னம் துறை படிந்து *
முள்ளுமில்லாச் சுள்ளி எரிமடுத்து *
முயன்று உன்னை நோற்கின்றேன் காம தேவா! **
கள்ளவிழ் பூங்கணை தொடுத்துக் கொண்டு *
கடல்வண்ணன் என்பதோர் பேர் எழுதி *

[1] இத்தனியன் வானமாமலை முதலான தென்திவ்யதேச ப்ராந்தங்களில் அனுஸந்திக்கப்படுகிறது

புள்ளினை வாய் பிளந்தான் என்பதோர் *
இலக்கினில் புக என்னை எய்கிற்றியே 2

506 மத்தநன் நறுமலர் முருக்கமலர்
கொண்டு * முப்போதும் உன்னடி வணங்கி *
தத்துவமிலி என்று நெஞ்செரிந்து *
வாசகத்தழித்து உன்னை வைதிடாமே **
கொத்தலர் பூங்கணை தொடுத்துக் கொண்டு *
கோவிந்தன் என்பதோர் பேர் எழுதி *
வித்தகன் வேங்கடவாணன் என்னும் *
விளக்கினில் புக என்னை விதிக்கிற்றியே 3

507 சுவரில் புராண! நின் பேர் எழுதிச் *
சுறவநற் கொடிக்களும் துரங்கங்களும் *
கவரிப் பிணாக்களும் கருப்பு வில்லும் *
காட்டித் தந்தேன் கண்டாய் காம தேவா! **
அவரைப் பிராயம் தொடங்கி * என்றும்
ஆதரித்து எழுந்த என் தடமுலைகள் *
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத் *
தொழுது வைத்தேன் ஒல்லை விதிக்கிற்றியே 4

508 வானிடை வாழும் அவ்வானவர்க்கு *
மறையவர் வேள்வியில் வகுத்த அவி *
கானிடைத் திரிவதோர் நரி புகுந்து *
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப **
ஊனிடை ஆழி சங்கு உத்தமர்க்கென்று *
உன்னித்து எழுந்த என் தடமுலைகள் *
மானிடவர்க்கென்று பேச்சுப்படில் *
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே! 5

509 உருவுடையார் இளையார்கள் நல்லார் *
ஓத்து வல்லார்களைக் கொண்டு * வைகல்
தெருவிடை எதிர் கொண்டு பங்குனி நாள் *
திருந்தவே நோற்கின்றேன் காம தேவா! **
கருவுடை முகில்வண்ணன் காயாவண்ணன் *
கருவிளை போல் வண்ணன் கமல வண்ணத் *
திருவுடை முகத்தினில் திருக்கண்களால் *
திருந்தவே நோக்கெனக்கு அருள்[2] கண்டய் 6

510 காயுடை நெல்லொடு கரும்பமைத்துக் *
கட்டி அரிசி அவல் அமைத்து *

[2] அருளு

வாயுடை மறையவர் மந்திரத்தால் *
மன்மதனே! உன்னை வணங்குகின்றேன் **
தேசமுன்னளந்தவன் திரிவிக்கிரமன்
திருக்கைகளால் என்னைத் தீண்டும் வண்ணம் *
சாயுடை வயிறும் என் தடமுலையும் *
தரணியில் தலைப்புகழ் தரக்கிற்றியே 7

511 மாசுடை உடம்பொடு தலை உலறி *
வாய்ப்புறம் வெளுத்து ஒரு போதும் உண்டு *
தேசுடைத் திறலுடைக் காம தேவா! *
நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள் கண்டாய் **
பேசுவதொன்று உண்டு இங்கு எம்பெருமான்! *
பெண்மையைத் தலையுடைத்து ஆக்கும் வண்ணம் *
கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள்
என்னும் * இப்பேறு எனக்கருள்[3] கண்டாய் 8

512 தொழுது முப்போதும் உன்னடி வணங்கித் *
தூமலர் தூய்த் தொழுது ஏத்துகின்றேன் *
பழுதின்றிப் பார்க்கடல் வண்ணனுக்கே *
பணி செய்து வாழப் பெறாவிடில் நான் **
அழுதழுது அலமந்து அம்மா வழங்க *
ஆற்றவும் அது உனக்கு உறைக்கும் கண்டாய் *
உழுவதோர் எருத்தினை நுகங்கொடு பாய்ந்து *
ஊட்டமின்றித் துரந்தால் ஒக்குமே 9

513 * கருப்பு வில் மலர்க் கணைக் காம வேளைக் *
கழலிணை பணிந்து அங்கோர் கரி அலற *
மருப்பினை ஒசித்துப் புள் வாய் பிளந்த *
மணிவண்ணற்கு என்னை வகுத்திடென்று **
பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும் *
புதுவையர் கோன் விட்டுசித்தன் கோதை *
விருப்புடை இன்தமிழ் மாலை வல்லார் *
விண்ணவர் கோன் அடி நண்ணுவரே 10

**அடிவரவு:** தை வெள்ளை மத்தம் சுவரில் வானிடை உரு காயுடை
மாசுடை தொழுது கருப்பு நாமம்

---

**ஆண்டாள் அருளிச் செய்த**

## நாச்சியார் திருமொழி 2: நாமமாயிரம்

**(இடைப் பெண்கள் சிற்றில் சிதைக்க வேண்டா என்று கண்ணனை வேண்டுதல்)**

[3] அருளு

514 * நாமம் ஆயிரம் ஏத்த நின்ற * நாராயணா! நரனே! * உன்னை
மாமி தன் மகனாகப் பெற்றால் * எமக்கு வாதை தவிருமே **
காமன்போதரு காலம் என்று * பங்குனி நாள் கடை பாரித்தோம் *
தீமை செய்யும் சிரீதரா! * எங்கள் சிற்றில் வந்து சிதையேலே 1

515 இன்று முற்றும் முதுகு நோவ * இருந்திழைத்த இச்சிற்றிலை *
நன்றும் கண்ணுற நோக்கி * நாங்கொளும்[4] ஆர்வம் தன்னைத் தணிகிடாய் **
அன்று பாலகனாகி * ஆலிலை மேல் துயின்ற எம் ஆதியாய்! *
என்றும் உன்தனக்கு எங்கள் மேல் * இரக்கம் எழாதது எம் பாவமே 2

516 குண்டுநீர் உறை கோளரீ! * மத யானை கோள் விடுத்தாய் * உன்னைக்
கண்டு மாலுறுவோங்களைக் * கடைக் கண்களாலிட்டு வாதியேல் **
வண்டல் நுண்மணல் தெள்ளி * யாம் வளைக் கைகளால் சிரமப்பட்டோம் *
தெண்திரைக் கடல் பள்ளியாய்! * எங்கள் சிற்றில் வந்து சிதையேலே 3

517 பெய்யுமா முகில் போல் வண்ணா! * உந்தன் பேச்சும் செய்கையும் * எங்களை
மையல் ஏற்றி மயக்க * உன் முகம் மாய மந்திரம் தான் கொலோ? **
நொய்யர் பிள்ளைகள் என்பதற்கு * உன்னை நோவ நாங்கள் உரைக்கிலோம் *
செய்ய தாமரைக் கண்ணினாய்! * எங்கள் சிற்றில் வந்து சிதையேலே 4

518 வெள்ளை நுண்மணல் கொண்டு * சிற்றில் விசித்திரப்பட * வீதி வாய்த்
தெள்ளி நாங்கள் இழைத்த கோலம் * அழித்தியாகிலும் உன்தன் மேல் **
உள்ளம் ஓடி உருகல் அல்லால் * உரோடம் ஒன்றுமிலோம் கண்டாய் *
கள்ள மாதவா! கேசவா! * உன் முகத்தன கண்கள் அல்லவே 5

519 முற்றிலாத பிள்ளைகளோம் * முலை போந்திலாதோமை * நாள் தொறும்
சிற்றில் மேலிட்டுக் கொண்டு * நீ சிறிதுண்டு திண்ணென நாம் அது
கற்றிலோம் ** கடலை அடைத்து அரக்கர் குலங்களை * முற்றவும்
செற்று * இலங்கையைப் பூசலாக்கிய சேவகா! * எம்மை வாதியேல் 6

520 பேதம் நன்கறிவார்களோடு * இவை பேசினால் பெரிது இன்சுவை *
யாதும் ஒன்றறியாத பிள்ளைகளோமை * நீ நலிந்து என் பயன்? **
ஓதமா கடல் வண்ணா! * உன் மணவாட்டிமாரொடு சூளுறும்[5] *
சேது பந்தம் திருத்தினாய்! * எங்கள் சிற்றில் வந்து சிதையேலே 7

521 வட்டவாய்ச் சிறு தூதையோடு * சிறு சுளகும் மணலும் கொண்டு *
இட்டமா விளையாடுவோங்களைச் * சிற்றில் ஈடழித்து என் பயன்? **
தொட்டுதைத்து நலியேல் கண்டாய் * சுடர்ச் சக்கரம் கையில் ஏந்தினாய்! *
கட்டியும் கைத்தால் இன்னாமை * அறிதியே கடல் வண்ணனே! 8

---

[4] நாங்களும்
[5] சூழறும்

522 முற்றத்தூடு புகுந்து * நின் முகம் காட்டிப் புன்முறுவல் செய்து *
சிற்றிலோடு எங்கள் சிந்தையும் * சிதைக்கக் கடவையோ? கோவிந்தா! **
முற்ற மண்ணிடம் தாவி * விண்ணுற நீண்டளந்து கொண்டாய்! * எம்மைப்
பற்றி மெய்ப்பிணக்கிட்டக்கால் * இந்தப் பக்கம் நின்றவர் என் சொல்லார்? 9

523 * சீதை வாய் அமுதம் உண்டாய்! * எங்கள் சிற்றில் நீ சிதையேல் என்று *
வீதி வாய் விளையாடும் * ஆயர் சிறுமியர் மழலைச் சொல்லை **
வேத வாய்த் தொழிலார்கள் வாழ் * வில்லிபுத்தூர் மன் விட்டுசித்தன் தன் *
கோதை வாய்த் தமிழ் வல்லவர் * குறைவின்றி வைகுந்தம் சேர்வரே[6] 10

**அடிவரவு:** நாமம் இன்று குண்டு பெய்யும் வெள்ளை முற்றிலாத பேதம் வட்டம் முற்றத்தூடு சீதை கோழி

---

### ஆண்டாள் அருளிச் செய்த
## நாச்சியார் திருமொழி 3: கோழியழைப்பதன்
### (கண்ணன் கவர்ந்த கூறைகளைக் கன்னியர் இரத்தல்)

524 * கோழி அழைப்பதன் முன்னம் * குடைந்து நீராடுவான் போந்தோம் *
ஆழியஞ் செல்வன் எழுந்தான் * அரவணை மேல் பள்ளி கொண்டாய்! **
ஏழைமை ஆற்றவும் பட்டோம் * இனி என்றும் பொய்கைக்கு வாரோம் *
தோழியும் நானும் தொழுதோம் * துகிலைப் பணித்தருளாயே 1

525 இதுவென் புகுந்தது இங்கந்தோ! * இப்பொய்கைக்கு எவ்வாறு வந்தாய்? *
மதுவின் துழாய் முடி மாலே! * மாயனே! எங்கள் அமுதே! **
விதியின்மையால் அது மாட்டோம் * வித்தகப் பிள்ளாய்! விரையேல் *
குதிகொண்டு அரவில் நடித்தாய்! * குருந்திடைக் கூறை பணியாய் 2

526 எல்லே ஈதென்ன இளமை? * எம்மனைமார் காணில் ஒட்டார் *
பொல்லாங்கு ஈதென்று கருதாய் * பூங்குருந்து ஏறி இருத்தி **
வில்லால் இலங்கை அழித்தாய்! * நீ வேண்டியதெல்லாம் தருவோம் *
பல்லாரும் காணாமே போவோம் * பட்டைப் பணித்தருளாயே 3

527 பரக்க விழித்து எங்கும் நோக்கிப் * பலர் குடைந்தாடும் சுனையில் *
அரக்க நில்லா கண்ண நீர்கள் * அலமருகின்றவா பாராய் **
இரக்கமேல் ஒன்றும் இலாதாய்! * இலங்கை அழித்த பிரானே! *
குரக்கரசு ஆவதறிந்தோம் * குருந்திடைக் கூறை பணியாய் 4

528 காலைக் கதுவிடுகின்ற * கயலொடு வாளை விரவி *
வேலைப் பிடித்து என்னைமார்களோட்டில் * என்ன விளையாட்டோ? **

---

[6] சேருவரே

கோலச் சிற்றாடை பலவும் கொண்டு * நீ ஏறி இராதே *
கோலம் கரிய பிரானே! * குருந்திடைக் கூறை பணியாய் 5

529 தடத்தவிழ் தாமரைப் பொய்கைத் * தாள்கள் எம் காலைக் கதுவ *
விடத்தேள் எறிந்தாலே போல * வேதனை ஆற்றவும் பட்டோம் **
குடத்தை எடுத்தேற விட்டுக் * கூத்தாட வல்ல எம் கோவே! *
படிற்றை எல்லாம் தவிர்ந்து * எங்கள் பட்டைப் பணித்தருளாயே 6

530 நீரிலே நின்று அயர்க்கின்றோம் * நீதி அல்லாதன செய்தாய் *
ஊரகம் சாலவும் சேய்த்தால் * ஊழி எல்லாம் உணர்வானே! **
ஆர்வம் உனக்கே உடையோம் * அம்மனைமார் காணில் ஒட்டார் *
போர விடாய் எங்கள் பட்டைப் * பூங்குருந்து ஏறி இராதே 7

531 மாமிமார் மக்களே அல்லோம் * மற்றும் இங்கு எல்லாரும் போந்தார் *
தூமலர்க் கண்கள் வளரத் * தொல்லையிராத் துயில்வானே! **
சேமமேல் அன்றிது சாலச் * சிக்கென நாம் இது சொன்னோம் *
கோமள ஆயர் கொழுந்தே! * குருந்திடைக் கூறை பணியாய் 8

532 கஞ்சன் வலை வைத்த அன்று * காரிருள் எல்லில் பிழைத்து *
நெஞ்சு துக்கம் செய்யப் போந்தாய் * நின்ற இக்கன்னியரோமை **
அஞ்ச உரப்பாள் அசோதை * ஆணாட விட்டிட்டு இருக்கும் *
வஞ்சகப் பேய்ச்சி பால் உண்ட * மசிமையிலீ![7] கூறை தாராய் 9

533 * கன்னியரோடு எங்கள் நம்பி * கரிய பிரான் விளையாட்டை *
பொன்னியல் மாடங்கள் சூழ்ந்த * புதுவையர் கோன் பட்டன் கோதை **
இன்னிசையால் சொன்ன மாலை * ஈரைந்தும் வல்லவர் தாம் போய் *
மன்னிய மாதவனோடு * வைகுந்தம் புக்கு இருப்பாரே 10

**அடிவரவு:** கோழி இது எல்லே பரக்க காலை தடத்து நீரில் மாமிமார்
கஞ்சன் கன்னியரோடு தெள்ளியார்

---

**ஆண்டாள் அருளிச் செய்த**

## நாச்சியார் திருமொழி 4: தெள்ளியார் பலர்

**(கூடலிழைத்தல்)**

534 * தெள்ளியார் * பலர் கை தொழும் தேவனார் *
வள்ளல் * மாலிருஞ்சோலை மணாளனார் **
பள்ளி கொள்ளும் இடத்து * அடி கொட்டிட *
கொள்ளுமாகில் நீ கூடிடு கூடலே! 1

[7] மகிமையிலீ

535 * காட்டில் வேங்கடம் * கண்ணபுர நகர் *
வாட்டம் இன்றி * மகிழ்ந்துறை வாமனன் **
ஓட்டரா வந்து * என் கைப் பற்றி * தன்னொடும்
கூட்டுமாகில் நீ கூடிடு கூடலே! 2

536 பூமகன் புகழ் வானவர் * போற்றுதற்
காமகன் * அணி வாணுதல் * தேவகி
மாமகன் ** மிகு சீர் * வசுதேவர் தம் *
கோமகன் வரில் * கூடிடு கூடலே! 3

537 ஆய்ச்சிமார்களும் * ஆயரும் அஞ்சிட *
பூத்த நீள் * கடம்பேறிப் புகப் பாய்ந்து **
வாய்த்த காளியன் மேல் * நடம் ஆடிய *
கூத்தனார் வரில் * கூடிடு கூடலே! 4

538 மாட மாளிகை சூழ் * மதுரைப் பதி
நாடி * நந்தெருவின் * நடுவே வந்திட்டு **
ஓடைமா * மத யானை உதைத்தவன் *
கூடுமாகில் * நீ கூடிடு கூடலே! 5

539 அற்றவன் * மருதம் முறிய நடை
கற்றவன் * கஞ்சனை * வஞ்சனையினால்
செற்றவன் ** திகழும் மதுரைப் பதி *
கொற்றவன் வரில் * கூடிடு கூடலே! 6

540 அன்று இன்னாதன செய் * சிசுபாலனும் *
நின்ற நீள் மருதும் * எருதும் புள்ளும் **
வென்றி வேல் * விறல் கஞ்சனும் வீழ * முன்
கொன்றவன் வரில் * கூடிடு கூடலே! 7

541 ஆவல் அன்புடையார் தம் * மனத்தன்றி
மேவலன் * விரை சூழ் * துவராபதிக்
காவலன் ** கன்று மேய்த்து விளையாடும் *
கோவலன் வரில் * கூடிடு கூடலே! 8

542 கொண்ட கோலக் * குறள் உருவாய்ச் சென்று *
பண்டு மாவலி தன் * பெரு வேள்வியில் **
அண்டமும் நிலனும் * அடி ஒன்றினால் *
கொண்டவன் வரில் * கூடிடு கூடலே! 9

543 பழகு நான்மறையின் பொருளாய் * மதம்
ஒழுகு வாரணம் * உய்ய அளித்த ** எம்
அழகனார் * அணி ஆய்ச்சியர் சிந்தையுள் *

குழகனார் வரில் * கூடிடு கூடலே! 10

544 * ஊடல் கூடல் * உணர்தல் புணர்தலை *
நீடு[8] நின்ற * நிறை புகழ் ஆய்ச்சியர் **
கூடலைக் * குழற் கோதை முன் கூறிய *
பாடல் பத்தும் வல்லார்க்கு * இல்லை பாவமே 11

**அடிவரவு:** தெள்ளியார் காட்டில் பூமகன் ஆய்ச்சிமார்கள் மாடம் அற்றவன்
அன்று ஆவல் கொண்ட பழகு ஊடல் மன்னு

---

### ஆண்டாள் அருளிச் செய்த
## நாச்சியார் திருமொழி 5: மன்னு பெரும்புகழ்
### (எம்பெருமானைக் கூவி அழைக்கும்படி குயிலை வேண்டுதல்)

545 * மன்னு பெரும்புகழ் மாதவன் * மாமணி
வண்ணன் மணிமுடி மைந்தன்
தன்னை * உகந்தது காரணமாக * என்
சங்கிழக்கும் வழக்குண்டே? **
புன்னை குருக்கத்தி ஞாழல் செருந்திப் *
பொதும்பினில் வாழும் குயிலே! *
பன்னி எப்போதும் இருந்து விரைந்து * என்
பவளவாயன் வரக் கூவாய் 1

546 வெள்ளை விளி சங்கு இடங்கையில் கொண்ட *
விமலன் எனக்கு உருக்காட்டான் *
உள்ளம் புகுந்து என்னை நைவித்து * நாளும்
உயிர்ப்பெய்து[9] கூத்தாட்டுக் காணும் **
கள்ளவிழ் செண்பகப் பூமலர் கோதிக் *
களித்திசை பாடும் குயிலே! *
மெள்ள இருந்து மிழற்றி மிழற்றாது * என்
வேங்கடவன் வரக் கூவாய் 2

547 மாதலி தேர் முன்பு கோல் கொள்ள * மாயன்
இராவணன் மேல் * சரமாரி
தாய்தலை அற்றற்று வீழத் * தொடுத்த
தலைவன் வரவெங்கும் காணேன் **
போதலர் காவில் புது மணம் நாறப் *
பொறிவண்டின் காமரம் கேட்டு * உன்
காதலியோடு உடன் வாழ் குயிலே! * என்

---

[8] நீடி
[9] உயிர்பெய்து

கருமாணிக்கம் வரக் கூவாய் 3

548 என்புருகி இனவேல் நெடுங்கண்கள் *
இமை பொருந்தா பல நாளும் *
துன்பக் கடல் புக்கு வைகுந்தன் என்பதோர் *
தோணி பெறாது உழல்கின்றேன் **
அன்புடையாரைப் பிரிவுறு நோய் * அது
நீயும் அறிதி குயிலே! *
பொன்புரை மேனிக் கருளக் கொடியுடைப் *
புண்ணியனை வரக் கூவாய் 4

549 * மென்னடை அன்னம் பரந்து விளையாடும் *
வில்லிபுத்தூர் உறைவான் தன் *
பொன்னடி காண்பதோர் ஆசயினால் * என்
பொருகயற் கண்ணிணை துஞ்சா **
இன்னடிசிலொடு பால் அமுதூட்டி *
எடுத்த என் கோலக் கிளியை *
உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே! *
உலகளந்தான் வரக் கூவாய் 5

550 எத்திசையும் அமரர் பணிந்து ஏத்தும் *
இருடீகேசன் வலி செய்ய *
முத்தன்ன வெண்முறுவல் செய்ய வாயும் *
முலையும் அழகழிந்தேன் நான் **
கொத்தலர் காவில் மணித்தடம் * கண்படை
கொள்ளும் இளங்குயிலே! * என்
தத்துவனை வரக் கூகிற்றியாகில் *
தலை அல்லால் கைம்மாறிலேனே 6

551 பொங்கிய பாற்கடல் பள்ளி கொள்வானைப் *
புணர்வதோர் ஆசையினால் * என்
கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்து *
ஆவியை ஆகுலம் செய்யும்
அங்குயிலே! * உனக்கென்ன மறைந்துறைவு? *
ஆழியும் சங்கும் ஒண்தண்டும் *
தங்கிய கையவனை வரக் கூவில் * நீ
சாலத் தருமம் பெறுதி 7

552 சார்ங்கம் வளைய வலிக்கும் * தடக்கைச்
சதுரன் பொருத்தம் உடையன் *
நாங்கள் எம்மிலிருந்து ஒட்டியகச்சங்கம் *
நானும் அவனும் அறிதும் **

தேங்கனி மாம்பொழில் செந்தளிர் கோதும் *
சிறு குயிலே! * திருமாலை
ஆங்கு விரைந்து ஒல்லை கூகிற்றியாகில் *
அவனை நான் செய்வன காணே 8

553 பைங்கிளி வண்ணன் சிரீதரன் என்பதோர் *
பாசத்து அகப்பட்டிருந்தேன் *
பொங்கொளி வண்டிரைக்கும் பொழில் வாழ் குயிலே! *
குறிக்கொண்டு இது நீ கேள் **
சங்கொடு சக்கரத்தான் வரக் கூவுதல் *
பொன்வளை கொண்டு தருதல் *
இங்குள்ள காவினில் வாழக் கருதில் *
இரண்டத்தொன்றேல் திண்ணம் வேண்டும் 9

554 அன்றுலகம் அளந்தானை உகந்து *
அடிமைக்கண் அவன் வலி செய்ய *
தென்றலும் திங்களும் ஊடறுத்து * என்னை
நலியும் முறைமை அறியேன் **
என்றும் இக்காவில் இருந்திருந்து * என்னைத்
ததைத்தாதே[10] நீயும் குயிலே! *
இன்று நாராயணனை வரக் கூவாயேல் *
இங்குத்தை[11] நின்றும் துரப்பன் 10

555 * விண்ணுற நீண்டு அடி தாவிய மைந்தனை *
வேற்கண் மடந்தை விரும்பி *
கண்ணுற என் கடல் வண்ணனைக் * கூவு
கருங்குயிலே! என்ற மாற்றம் **
பண்ணுறு நான்மறையோர் புதுவை மன்னன் *
பட்டர்பிரான் கோதை சொன்ன *
நண்ணுறு வாசக மாலை வல்லார் * நமோ
நாராயணாய என்பாரே 11

**அடிவரவு:** மன்னு வெள்ளை மாதலி என்பு மென்னடை எத்திசை பொங்கிய
சார்ங்கம் பைங்கிளி அன்று விண் வாரணம்

---

### ஆண்டாள் அருளிச் செய்த
## நாச்சியார் திருமொழி 6 - வாரணமாயிரம்[12]
### (ஆயனை மணம் செய்து கொள்வதாகத் தான் கண்ட கனாவைத்

---

[10] ததர்த்தாதே
[11] இங்குற்று
[12] இது கல்யாண காலங்களில் பாடும் சீர்ப் பாடல்

**தலைவி தோழிக்குக் கூறுதல்)**

556 * வாரணம் ஆயிரம் * சூழ வலம் செய்து *
நாரண நம்பி * நடக்கின்றான் என்றெதிர் **
பூரண பொற்குடம் * வைத்துப் புரம்[13] எங்கும் *
தோரணம் நாட்டக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 1

557 நாளை வதுவை * மணம் என்று நாள் இட்டு *
பாளை கமுகு * பரிசுடைப் பந்தற் கீழ் **
கோள் அரி மாதவன் * கோவிந்தன் என்பான் ஓர் *
காளை புகுதக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 2

558 இந்திரன் உள்ளிட்ட * தேவர் குழாம் எல்லாம் *
வந்திருந்து என்னை * மகள் பேசி மந்திரித்து **
மந்திரக் கோடி உடுத்தி * மண மாலை *
அந்தரி சூட்டக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 3

559 நால் திசைத் தீர்த்தம் கொணர்ந்து * நனி நல்கி *
பார்ப்பனச் சிட்டர்கள் * பல்லார்[14] எடுத்தேத்தி **
பூப்புனை கண்ணிப் * புனிதனோடு என்தன்னை *
காப்பு நாண் கட்டக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 4

560 கதிரொளி தீபம் * கலசம் உடன் ஏந்தி *
சதிர் இளமங்கையர் தாம் * வந்தெதிர் கொள்ள **
மதுரையார் மன்னன் * அடி நிலை தொட்டு எங்கும் *
அதிரப் புகுதக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 5

561 மத்தளம் கொட்ட * வரி சங்கம் நின்றூத *
முத்துடைத் தாமம் * நிறை தாழ்ந்த பந்தற் கீழ் **
மைத்துனன் நம்பி * மதுசூதன் வந்து என்னைக் *
கைத்தலம் பற்றக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 6

562 வாய் நல்லார் * நல்ல மறை ஓதி மந்திரத்தால் *
பாசிலை நாணல் படுத்துப் * பரிதி வைத்து **
காய்சினமா களிறு அன்னான் * என் கைப் பற்றி *
தீ வலம் செய்யக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 7

563 இம்மைக்கும் * ஏழ் ஏழ் பிறவிக்கும் பற்றாவான் *
நம்மை உடையவன் * நாராயணன் நம்பி **
செம்மை உடைய * திருக்கையால் தாள் பற்றி *

[13] புறம்
[14] பல்லாண்டு

அம்மி மிதிக்கக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 8

564 வரிசிலை வாள் முகத்து * என்னைமார் தாம் வந்திட்டு *
எரி முகம் பாரித்து * என்னை முன்னே நிறுத்தி **
அரி முகன் அச்சுதன் * கைம்மேல் என் கை வைத்து *
பொரி முகம் தட்டக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 9

565 குங்குமம் அப்பிக் * குளிர் சாந்தமட்டித்து *
மங்கல வீதி * வலம் செய்து மண நீர் **
அங்கு அவனோடும் * உடன் சென்று அங்கானை மேல் *
மஞ்சனம் ஆட்டக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 10

566 * ஆயனுக்காகத் * தான் கண்ட கனாவினை *
வேயர் புகழ் * வில்லிபுத்தூர்க் கோன் கோதை சொல் **
தூய தமிழ் மாலை * ஈரைந்தும் வல்லவர் *
வாயு நன்மக்களைப் பெற்று * மகிழ்வரே 11

**அடிவரவு:** வாரணம் நாளை இந்திரன் நால்திசை கதிர் மத்தளம் வாய்
இம்மைக்கும் வரிசிலை குங்குமம் ஆயனுக்காக கருப்பூரம்

---

### ஆண்டாள் அருளிச் செய்த
## நாச்சியார் திருமொழி 7: கருப்பூரம் நாறுமோ
### (பாஞ்சசன்னியத்தைப் பத்மநாபனோடும் சுற்றமாக்குதல்)

567 * கருப்பூரம் நாறுமோ? * கமலப்பூ நாறுமோ? *
திருப்பவளச் செவ்வாய் தான் * தித்தித்து இருக்குமோ? **
மருப்பொசித்த மாதவன் தன் * வாய்ச் சுவையும் நாற்றமும் *
விருப்புற்றுக் கேட்கின்றேன் * சொல்லாழி வெண்சங்கே! 1

568 கடலில் பிறந்து கருதாது * பஞ்சசனன்
உடலில் வளர்ந்து போய் * ஊழியான் கைத்தலத்
திடரில் ** குடியேறித் * தீய அசுரர் *
நடலைப்பட முழங்கும் * தோற்றத்தாய் நற்சங்கே! 2

569 தடவரையின் மீதே * சரற்கால சந்திரன் *
இடையுவாவில் வந்து * எழுந்தாலே போல் ** நீயும்
வடமதுரையார் மன்னன் * வாசுதேவன் கையில் *
குடியேறி வீற்றிருந்தாய் * கோலப் பெரும் சங்கே! 3

570 சந்திர மண்டலம் போல் * தாமோதரன் கையில் *
அந்தரம் ஒன்றின்றி * ஏறி அவன் செவியில் **

மந்திரம் கொள்வாயே போலும் * வலம்புரியே! *
இந்திரனும் உன்னோடு * செல்வத்துக்கு ஏலானே 4

571 உன்னோடு உடனே * ஒரு கடலில் வாழ்வாரை *
இன்னார் இனையார்[15] என்று * எண்ணுவார் இல்லை காண் **
மன்னாகி நின்ற * மதுசூதன் வாய் அமுதம் *
பன்னாளும் உண்கின்றாய் * பாஞ்சசன்னியமே! 5

572 போய்த்தீர்த்தம் ஆடாதே * நின்ற புணர் மருதம் *
சாய்த்தீர்த்தான் கைத்தலத்தே * ஏறிக் குடி கொண்டு **
சேய்த்தீர்தமாய் நின்ற * செங்கண்மால் தன்னுடைய *
வாய்த்தீர்த்தம் பாய்ந்தாட வல்லாய் * வலம்புரியே! 6

573 செங்கமல நாண்மலர் மேல் * தேனுகரும் அன்னம் போல் *
செங்கட் கருமேனி * வாசுதேவனுடைய **
அங்கைத் தலம் ஏறி * அன்ன வசம் செய்யும் *
சங்கரையா! உன் செல்வம் * சால அழகியதே 7

574 உண்பது சொல்லில் * உலகளந்தான் வாய் அமுதம் *
கண்படை கொள்ளில் * கடல்வண்ணன் கைத்தலத்தே **
பெண்படையார் உன் மேல் * பெரும் பூசல் சாற்றுகின்றார் *
பண்பல செய்கின்றாய் * பாஞ்சசன்னியமே! 8

575 பதினாறாம் ஆயிரவர் * தேவிமார் பார்த்திருப்ப *
மதுவாயில் கொண்டாற் போல் * மாதவன் தன் வாய் அமுதம் **
பொதுவாக உண்பதனைப் * புக்கு நீ உண்டக்கால் *
சிதையாரோ உன்னோடு? * செல்வப் பெரும் சங்கே! 9

576 * பாஞ்சசன்னியத்தைப் * பற்பநாபனோடும் *
வாய்ந்த பெரும் சுற்றம் * ஆக்கிய வண்புதுவை **
ஏய்ந்த புகழ்ப் பட்டர்பிரான் * கோதை தமிழ் ஈரைந்தும் *
ஆய்ந்தேத்த வல்லார் * அவரும் அணுக்கரே 10

**அடிவரவு:** கருப்பூரம் கடலில் தடவரை சந்திர உன்னோடு போய்
செங்கமலம் உண்பது பதினாறு பாஞ்சசன்னியத்தை விண்

---

## ஆண்டாள் அருளிச் செய்த
## நாச்சியார் திருமொழி 8: விண்ணீல மேலாப்பு
## (மேக விடு தூது)

[15] இனியார்

577 * விண்ணீல மேலாப்பு * விரித்தாற் போல் மேகங்காள்! *
தெண்ணீர் பாய் வேங்கடத்து * என் திருமாலும் போந்தானே? **
கண்ணீர்கள் முலைக் குவட்டில் * துளி சோரச் சோர்வேனை *
பெண்ணீர்மை ஈடழிக்கும் * இது தமக்கோர் பெருமையே 1

578 மாமுத்த நிதி சொரியும் * மாமுகில்காள்! * வேங்கடத்துச்
சாமத்தின் நிறம் கொண்ட * தாடாளன்[16] வார்த்தை என்னே! **
காமத் தீயுள் புகுந்து * கதுவப்பட்டு இடைக் கங்குல் *
ஏமத்தோர் தென்றலுக்கு * இங்கு இலக்காய் நான் இருப்பேனே 2

579 ஒளிவண்ணம் வளை சிந்தை * உறக்கத்தோடு இவை எல்லாம் *
எளிமையால் இட்டு என்னை * ஈடழியப் போயினவால் **
குளிர் அருவி வேங்கடத்து * என் கோவிந்தன் குணம் பாடி *
அளியத்த மேகங்காள்! * ஆவி காத்து இருப்பேனே 3

580 மின்னாகத்து எழுகின்ற * மேகங்காள்! * வேங்கடத்துத்
தன்னாகத் திருமங்கை * தங்கிய சீர் மார்வர்க்கு **
என்னாகத்து இளங்கொங்கை * விரும்பித் தாம் நாள் தோறும் *
பொன்னாகம் புல்குதற்கு * என் புரிவுடைமை செப்புமினே 4

581 வான் கொண்டு கிளர்ந்து எழுந்த * மாமுகில்காள்! * வேங்கடத்துத்
தேன் கொண்ட மலர் சிதறத் * திரண்டேறிப் பொழிவீர்காள்! **
ஊன் கொண்ட வள்ளுகிரால் * இரணியனை உடல் இடந்தான் *
தான் கொண்ட சரிவளைகள் * தருமாகில் சாற்றுமினே 5

582 சலங்கொண்டு கிளர்ந்து எழுந்த * தண் முகில்காள்! * மாவலியை
நிலங்கொண்டான் வேங்கடத்தே * நிரந்தேறிப் பொழிவீர்காள்! **
உலங்குண்ட விளங்கனி போல் * உள் மெலியப் புகுந்து * என்னை
நலங்கொண்ட நாரணற்கு[17] * என் நடலை நோய் செப்புமினே 6

583 * சங்கமா கடல் கடைந்தான் * தண் முகில்காள்! * வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக் கீழ் * அடி வீழ்ச்சி விண்ணப்பம் **
கொங்கை மேல் குங்குமத்தின் * குழம்பழியப் புகுந்து * ஒரு நாள்
தங்குமேல் * என் ஆவி தங்கும் என்று உரையீரே 7

584 கார் காலத்து எழுகின்ற * கார் முகில்காள்! * வேங்கடத்துப்
போர் காலத்து எழுந்தருளிப் * பொருதவனார் பேர் சொல்லி **
நீர் காலத்து எருக்கி * நம் பழவிலை போல் வீழ்வேனை *
வார் காலத்து ஒரு நாள் * தம் வாசகம் தந்தருளாரே 8

[16] தாளாளன்

[17] நாரணர்க்கு

585 * மத யானை போல் எழுந்த * மாமுகில்காள்! * வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள்! * பாம்பணையான் வார்த்தை என்னே! **
கதி என்றும் தான் ஆவான் * கருதாது * ஓர் பெண் கொடியை
வதை செய்தான் என்னும் சொல் * வையகத்தார் மதியாரே 9

586 * நாகத்தின் அணையானை * நன்னுதலாள் நயந்துரை செய் *
மேகத்தை வேங்கடக் கோன் * விடு தூதில் விண்ணப்பம் **
போகத்தில் வழுவாத * புதுவையர் கோன் கோதை தமிழ் *
ஆகத்து வைத்துரைப்பார் * அவரடியார் ஆகுவரே 10

**அடிவரவு:** விண் மா ஒளி மின் வான் சலம் சங்கம் கார் மதம்
நாகம் சிந்துரம்

---

### ஆண்டாள் அருளிச் செய்த
## நாச்சியார் திருமொழி 9 - சிந்துரச் செம்பொடி
### (திருமாலிருஞ்சோலை அழகரை வழிபடுதல்)

587 * சிந்துரச் செம்பொடிப் போல் * திருமாலிருஞ்சோலை எங்கும் *
இந்திர கோபங்களே * எழுந்தும் பரந்திட்டனவால் **
மந்தரம் நாட்டி அன்று * மதுரக் கொழுஞ்சாறு கொண்ட *
சுந்தரத் தோள் உடையான் * சுழலையில் நின்று உய்துங்கொலோ? 1

588 போர்க் களிறு பொரும் * மாலிருஞ்சோலையம் பூம்புறவில் *
தார்க்கொடி முல்லைகளும் * தவள நகை காட்டுகின்ற **
கார்க்கொள் படாக்கள்[18] நின்று * கழறிச் சிரிக்கத் தரியேன் *
ஆர்க்கிடுகோ? தோழீ! * அவன் தார் செய்த பூசலையே 2

589 கருவிளை ஒண் மலர்காள்! * காயா மலர்காள்! * திருமால்
உருவொளி காட்டுகின்றீர் * எனக்கு உய்வழக்கொன்று உரையீர் **
திருவிளையாடு திண் தோள் * திருமாலிருஞ்சோலை நம்பி *
வரி வளையில் புகுந்து * வந்தி பற்றும் வழக்குளதே 3

590 பைம்பொழில் வாழ் குயில்காள்! * மயில்காள்! ஒண் கருவிளைகாள்! *
வம்பக் களங்கனிகாள்! * வண்ணப் பூவை நறுமலர்காள்! **
ஐம்பெரும் பாதகர்காள்! * அணி மாலிருஞ்சோலை நின்ற *
எம்பெருமானுடைய நிறம் * உங்களுக்கு என் செய்வதே? 4

591 துங்க மலர்ப் பொழில் சூழ் * திருமாலிருஞ்சோலை நின்ற *
செங்கட் கருமுகிலின் * திரு உருப் போல் ** மலர் மேல்

---

[18] பிடாக்கள்

தொங்கிய வண்டினங்காள்! * தொகு பூஞ் சுனைகாள்! * சுனையில்
தங்கு செந்தாமரைகாள்! * எனக்கு ஓர் சரண் சாற்றுமினே 5

592 * நாறு நறும் பொழில் * மாலிருஞ்சோலை நம்பிக்கு * நான்
நூறு தடாவில் வெண்ணெய் * வாய் நேர்ந்து பராவி வைத்தேன் **
நூறு தடா நிறைந்த * அக்கார அடிசில் சொன்னேன் *
ஏறு திரு உடையான் * இன்று வந்து இவை கொள்ளுங்கொலோ? 6

593 இன்று வந்து இத்தனையும் * அமுது செய்திடப் பெறில் * நான்
ஒன்று நூறாயிரமாக் கொடுத்துப் * பின்னும் ஆளும் செய்வன் **
தென்றல் மணம் கமழும் * திருமாலிருஞ்சோலை தன்னுள்
நின்ற பிரான் * அடியேன் மனத்தே வந்து நேர் படிலே 7

594 காலை எழுந்திருந்து * கரிய குருவிக் கணங்கள் *
மாலின் வரவு சொல்லி * மருள் பாடுதல் மெய்ம்மை கொலோ? **
சோலை மலைப் பெருமான் * துவராபதி எம்பெருமான் *
ஆலினிலைப் பெருமான் * அவன் வார்த்தை உரைக்கின்றதே 8

595 கோங்கலரும் பொழில் * மாலிருஞ்சோலையில் கொன்றைகள் மேல் *
தூங்கு பொன் மாலைகளோடு * உடனாய் நின்று தூங்குகின்றேன் **
பூங்கொள் திருமுகத்து * மடுத்தூதிய சங்கொலியும் *
சார்ங்கவில் நாண் ஒலியும் * தலைப்பெய்வது எஞ்ஞான்று கொலோ 9

596 * சந்தொடு காரகிலும் சுமந்து * தடங்கள் பொருது *
வந்திழியும் சிலம்பாறுடை * மாலிருஞ்சோலை நின்ற
சுந்தரனை ** சுரும்பார் குழல் * கோதை தொகுத்துரைத்த *
செந்தமிழ் பத்தும் வல்லார் * திருமால் அடி சேர்வர்களே 10

**அடிவரவு:** சிந்துரம் போர் கருவிளை பைம்பொழில் துங்கம் நாறு இன்று
காலை கோங்கு சந்தொடு கார்க்கோடல்

---

### ஆண்டாள் அருளிச் செய்த
## நாச்சியார் திருமொழி 10: கார்க்கோடல் பூக்காள்
### (தலைவி பிரிந்த நிலையில் பிரிவாற்றாது வருந்திக் கூறுதல்)

597 * கார்க்கோடல் பூக்காள்! * கார்க்கடல் வண்ணன் என் மேல் * உம்மைப்
போர்க்கோலம் செய்து * போர விடுத்தவன் எங்குற்றான்? **
ஆர்க்கோ இனி நாம் * பூசல் இடுவது? * அணி துழாய்த்
தார்க்கோடும் நெஞ்சம் தன்னைப் * படைக்க வல்லேன் அந்தோ! 1

598 மேல் தோன்றிப் பூக்காள்! * மேல் உலகங்களின் மீது போய் *

மேல் தோன்றும் சோதி * வேத முதல்வர் வலங்கையில் **
மேல் தோன்றும் ஆழியின் * வெஞ்சுடர் போலச் சுடாது * எம்மை
மாற்றோலைப் பட்டவர் கூட்டத்து * வைத்துக் கொள்கிற்றிரே 2

599 கோவை மணாட்டி! * நீ உன் கொழுங்கனி கொண்டு * எம்மை
ஆவி தொலைவியேல் * வாயழகர் தம்மை அஞ்சுதும் **
பாவியேன் தோன்றிப் * பாம்பணையார்க்கும் தம் பாம்பு போல் *
நாவும் இரண்டுள ஆயிற்று[19] நாணிலியேனுக்கே 3

600 முல்லைப் பிராட்டி! * நீ உன் முறுவல்கள் கொண்டு * எம்மை
அல்லல் விளைவியேல் * ஆழிநங்காய்! உன் அடைக்கலம் **
கொல்லை அரக்கியை மூக்கரிந்திட்ட * குமரனார்
சொல்லும் பொய் ஆனால் * நானும் பிறந்தமை பொய் அன்றே 4

601 பாடும் குயில்காள்! * ஈதென்ன பாடல்? * நல் வேங்கட
நாடர் நமக்கு ஒரு வாழ்வு தந்தால் * வந்து பாடுமின் **
ஆடும் கருளக் கொடி உடையார் * வந்து அருள் செய்து *
கூடுவர் ஆயிடில் * கூவி நும் பாட்டுகள் கேட்டுமே 5

602 கணமா மயில்காள்! * கண்ண பிரான் திருக்கோலம் போன்று *
அணிமா நடம் பயின்று ஆடுகின்றீர்க்கு * அடி வீழ்கின்றேன் **
பணமாடரவணைப்[20] * பற்பல காலமும் பள்ளி கொள் *
மணவாளர் நம்மை வைத்த * பரிசிது காண்மினே 6

603 நடமாடித் தோகை விரிக்கின்ற * மாமயில்காள்! * உம்மை
நடமாட்டம் காணப் * பாவியேன் நான் ஓர் முதலிலேன் **
குடமாடு கூத்தன் * கோவிந்தன் கோமிறை செய்து * எம்மை
உடைமாடு கொண்டான் * உங்களுக்கு[21] இனி ஒன்று போதுமே? 7

604 * மழையே! மழையே! மண்புறம் பூசி * உள்ளாய் நின்ற
மெழுகு ஊற்றினாற் போல் * ஊற்று நல் வேங்கடத்துள் நின்ற **
அழகப் பிரானார் தம்மை * என் நெஞ்சத்து அகப்படத்
தழுவ நின்று * என்னைத் ததர்த்திக்[22] கொண்டு * ஊற்றவும் வல்லையே?8

605 கடலே! கடலே! உன்னைக் கடைந்து * கலக்குறுத்து *
உடலுள் புகுந்து நின்று * ஊறல் அறுத்தவற்கு ** என்னையும்
உடலுள் புகுந்து நின்று * ஊறல் அறுக்கின்ற மாயற்கு * என்
நடலைகள் எல்லாம் * நாகணைக்கே சென்று உரைத்தியே 9

---
[19] ஆய்த்து
[20] பணவாடரவணை
[21] உங்கட்கு
[22] ததைத்து

606 * நல்ல என் தோழி! * நாகணை மிசை நம் பரர் *
செல்வர் பெரியர் * சிறுமானிடவர் நாம் செய்வதென்? **
வில்லி புதுவை * விட்டுசித்தர் தங்கள் தேவரை *
வல்ல பரிசு வருவிப்பரேல் * அது காண்டுமே 10

**அடிவரவு:** கார் மேல் கோவை முல்லை பாடும் கணம் நடமாடி மழையே கடலே நல்ல தாம்

---

## ஆண்டாள் அருளிச் செய்த
## நாச்சியார் திருமொழி 11: தாமுகக்கும்
### (தலைவி திருவரங்கன் செய்கைகு மனம் பொறாது தாய்மார் முதலியோரை நோக்கி வருந்திக் கூறுதல்)

607 * தாம் உகக்கும் தம் கையில் * சங்கமே போலாவோ? *
யாம் உகக்கும் எங்கையில் * சங்கமும் ஏந்திழையீர்! **
தீ முகத்து நாகணை மேல் * சேரும் திருவரங்கர் *
ஆ! முகத்தை நோக்காரால் * அம்மனே! அம்மனே! 1

608 எழில் உடைய அம்மனைமீர்! * என்னரங்கத்து இன்னமுதர் *
குழலழகர் வாயழகர் * கண்ணழகர் ** கொப்பூழில்
எழுகமலப் பூவழகர் * எம்மானார் * என்னுடைய
கழல் வளையைத் * தாமும் கழல் வளையே ஆக்கினரே 2

609 * பொங்கோதம் சூழ்ந்த * புவனியும் விண்ணுலகும் *
அங்காதும் சோராமே * ஆள்கின்ற எம்பெருமான் **
செங்கோல் உடைய * திருவரங்கச் செல்வனார் *
எங்கோல் வளையால் * இடர் தீர்வர் ஆகாதே? 3

610 மச்சணி மாட * மதிள் அரங்கர் வாமனனார் *
பச்சைப் பசுந்தேவர் * தாம் பண்டு நீர் ஏற்ற **
பிச்சைக் குறையாகி * என்னுடைய பெய்வளை மேல் *
இச்சை உடையரேல் * இத்தெருவே போதாரே? 4

611 பொல்லாக் குறள் உருவாய்ப் * பொற்கையில் நீர் ஏற்று *
எல்லா உலகும் * அளந்து கொண்ட எம்பெருமான் **
நல்லார்கள் வாழும் * நளிர் அரங்க நாகணையான் *
இல்லாதோம் கைப்பொருளும் * எய்துவான் ஒத்துளனே 5

612 கைப்பொருள்கள் முன்னமே * கைக்கொண்டார் * காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் * திருவரங்கச் செல்வனார் **
எப்பொருட்கும் நின்றார்க்கும் * எய்தாது * நான்மறையின்

சொற்பொருளாய் நின்றார் * என் மெய்ப்பொருளும் கொண்டாரே 6

613 உண்ணாது உறங்காது * ஒலி கடலை ஊடறுத்து *
பெண்ணாக்கை ஆப்புண்டு * தாம் உற்ற பேதெல்லாம் **
திண்ணார் மதிள் சூழ் * திருவரங்கச் செல்வனார் *
எண்ணாதே தம்முடைய * நன்மைகளே எண்ணுவரே 7

614 * பாசி தூர்த்துக் கிடந்த * பார்மகட்கு * பண்டொரு நாள்
மாசுடம்பில் நீர் வாரா[23] * மானமிலாப் பன்றியாம் **
தேசுடைய தேவர் * திருவரங்கச் செல்வனார் *
பேசி இருப்பனகள் * பேர்க்கவும் பேராவே 8

615 கண்ணாலம் கோடித்துக் * கன்னி தன்னைக் கைப்பிடிப்பான் *
திண்ணார்ந்திருந்த * சிசுபாலன் தேசழிந்து **
அண்ணாந்திருக்கவே * ஆங்கவளைக் கைப்பிடித்த *
பெண்ணாளன் பேணுமூர் * பேரும் அரங்கமே 9

616 * செம்மை உடைய * திருவரங்கர் தாம் பணித்த *
மெய்ம்மைப் பெரு வார்த்தை * விட்டுசித்தர் கேட்டு இருப்பர் **
தம்மை உகப்பாரைத் * தாம் உகப்பர் என்னும் சொல் *
தம்மிடையே பொய்யானால் * சாதிப்பார் ஆர் இனியே? 10

**அடிவரவு:** தாம் எழில் பொங்கு மச்சு பொல்லா கை உண்ணாது பாசி
கண்ணாலம் செம்மை மற்று

---

**ஆண்டாள் அருளிச் செய்த**

## நாச்சியார் திருமொழி 12: மற்றிருந்தீர்கட்கு

**(தலைவி கண்ணன் உள்ள இடத்தில் தன்னைக்
கொண்டு விடும்படி உற்றாரை வேண்டுதல்)**

617 * மற்றிருந்தீர்கட்கு அறியலாகா *
மாதவன் என்பதோர் அன்பு தன்னை *
உற்றிருந்தேனுக்கு உரைப்பது எல்லாம் *
ஊமையரோடு செவிடர் வார்த்தை **
பெற்றிருந்தாளை ஒழியவே போய்ப் *
பேர்த்தொரு தாயில் வளர்ந்த நம்பி *
மற்பொருந்தாமற்களம் அடைந்த *
மதுரைப் புறத்து என்னை உய்த்திடுமின் 1

---

[23] வாரா

618 நாணி இனியோர் கருமம் இல்லை *
நாலயலாரும் அறிந்தொழிந்தார் *
பாணியாது என்னை மருந்து செய்து *
பண்டு பண்டாக்க உறுதிராகில் **
மாணி உருவாய் உலகளந்த *
மாயனைக் காணில் தலைமறியும் *
ஆணையால் நீர் என்னைக் காக்க வேண்டில் *
ஆய்ப்பாடிக்கே என்னை உய்த்திடுமின் 2

619 தந்தையும் தாயும் உற்றாரும் நிற்கத் *
தனி வழி போயினாள் என்னும் சொல்லு *
வந்த பின்னைப் பழி காப்பரிது *
மாயவன் வந்து உருக்காட்டுகின்றான் **
கொந்தளமாக்கிப் பரக்கழித்துக் *
குறும்பு செய்வான் ஓர் மகனைப் பெற்ற *
நந்தகோபாலன் கடைத்தலைக்கே *
நள்ளிருட்கண் என்னை உய்த்திடுமின் 3

620 அங்கைத் தலத்திடை ஆழி கொண்டான் *
அவன் முகத்தன்றி விழியேன் என்று *
செங்கச்சுக் கொண்டு கண்ணாடை ஆர்த்துச் *
சிறுமானிடவரைக் காணில் நாணும் **
கொங்கைத் தலமிவை நோக்கிக் காணீர் *
கோவிந்தனுக்கல்லால் வாயில் போகா *
இங்குத்தை வாழ்வை ஒழியவே போய் *
யமுனைக் கரைக்கு என்னை உய்த்திடுமின் 4

621 ஆர்க்கும் என் நோய் இது அறியல் ஆகாது *
அம்மனைமீர்! துழதிப்படாதே *
கார்க்கடல் வண்ணன் என்பான் ஒருவன் *
கைகண்ட யோகம் தடவத் தீரும் **
நீர்க்கரை நின்ற கடம்பை ஏறிக் *
காளியன் உச்சியில் நட்டம் பாய்ந்து *
போர்க்களமாக நிருத்தம் செய்த *
பொய்கைக் கரைக்கு என்னை உய்த்திடுமின் 5

622 கார்த்தண் முகிலும் கருவிளையும் *
காயா மலரும் கமலப் பூவும் *
ஈர்த்திடுகின்றன என்னை வந்திட்டு *
இருடீகேசன் பக்கல் போகே என்று **
வேர்த்துப் பசித்து வயிறசைந்து *
வேண்டடிசில் உண்ணும் போது * ஈதென்று
பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும் *

பத்தவிலோசனத்து உய்த்திடுமின் 6

623 வண்ணம் திரிவும் மனங்குழைவும் *
மானம் இலாமையும் வாய் வெளுப்பும் *
உண்ணல் உறாமையும் உள் மெலிவும் *
ஓதநீர் வண்ணன் என்பான் ஒருவன் **
தண்ணன் துழாய் என்னும் மாலை கொண்டு *
சூட்டத் தணியும் பிலம்பன் தன்னைப் *
பண்ணழியப் பலதேவன் வென்ற *
பாண்டி வடத்து என்னை உய்த்திடுமின் 7

624 கற்றினம் மேய்க்கிலும்[24] மேய்க்கப் பெற்றான் *
காடு வாழ் சாதியும் ஆகப் பெற்றான் *
பற்றி உரலிடை ஆப்புமுண்டான் *
பாவிகாள்! உங்களுக்கு ஏச்சுக் கொலோ? **
கற்றன பேசி வசையுணாதே[25] *
காலிகள் உய்ய மழை தடுத்து *
கொற்றக் குடையாக ஏந்தி நின்ற *
கோவர்த்தனத்து என்னை உய்த்திடுமின் 8

625 கூட்டில் இருந்து கிளி எப்போதும் *
கோவிந்தா! கோவிந்தா! என்று அழைக்கும் *
ஊட்டுக் கொடாது செறுப்பனாகில் *
உலகளந்தான் என்று உயரக் கூவும் **
நாட்டில் தலைப்பழி எய்தி *
உங்கள் நன்மை இழந்து தலையிடாதே *
சூட்டுயர் மாடங்கள் சூழ்ந்து தோன்றும் *
துவராபதிக்கு என்னை உய்த்திடுமின் 9

626 * மன்னு மதுரை தொடக்கமாக *
வண்துவராபதி தன்னளவும் *
தன்னைத் தமர் உய்த்துப் பெய்ய வேண்டித் *
தாழ்குழலாள் துணிந்த துணிவை **
பொன்னியல் மாடம் பொலிந்து தோன்றும் *
புதுவையர் கோன் விட்டுசித்தன் கோதை *
இன்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலை *
ஏத்த வல்லார்க்கு இடம் வைகுந்தமே 10

**அடிவரவு:** மற்று நாணி தந்தை அங்கை ஆர்க்கும் கார்த்தண் வண்ணம்
கற்றினம் கூட்டில் மன்னு கண்ணன்

[24] மேய்க்கவும்
[25] வசவுணாதே

## ஆண்டாள் அருளிச் செய்த
# நாச்சியார் திருமொழி 13: கண்ணனென்னும்
### (தலைவி கண்ணன் அணிந்த ஆடை முதலியவற்றால் தன் வாட்டத்தைத் தணிக்க வேண்டுதல்)

627 * கண்ணன் என்னும் கருந்தெய்வம் * காட்சி பழகிக் கிடப்பேனை *
புண்ணில் புளிப்பெய்தாற் போல்[26] * புறம் நின்று அழகு பேசாதே **
பெண்ணின் வருத்தம் அறியாத * பெருமான் அரையில் பீதக
வண்ண ஆடை கொண்டு * என்னை வாட்டம் தணிய வீசீரே 1

628 பால் ஆலிலையில் துயில் கொண்ட * பரமன் வலைப்பட்டிருந்தேனை *
வேலால் துன்னம் பெய்தாற் போல் * வேண்டிற்றெல்லாம் பேசாதே **
கோலால் நிரை மேய்த்து ஆயனாய்க் * குடந்தைக் கிடந்த குடமாடி *
நீலார் தண்ணந்துழாய் கொண்டு * என் நெறிமேன் குழல் மேல் சூட்டீரே 2

629 கஞ்சைக் காய்ந்த கருவில்லி * கடைக்கண் என்னும் சிறைக் கோலால் *
நெஞ்சு ஊடுருவ ஏவுண்டு * நிலையும் தளர்ந்து நைவேனை **
அஞ்சேல் என்னான் அவன் ஒருவன் * அவன் மார்வணிந்த வனமாலை *
வஞ்சியாதே தருமாகில் * மார்வில் கொணர்ந்து புரட்டீரே 3

630 ஆரே உலகத்து ஆற்றுவார்? * ஆயர்பாடி கவர்ந்துண்ணும் *
காரேறுழக்க உழக்குண்டு * தளர்ந்தும் முறிந்தும் கிடப்பேனை **
ஆராவமுதம் அனையான் தன் * அமுத வாயில் ஊறிய *
நீர் தான் கொணர்ந்து புலராமே * பருக்கி இளைப்பை நீக்கிரே 4

631 அழிலும் தொழிலும் உருக்காட்டான் * அஞ்சேல் என்னான் அவன் ஒருவன் *
தழுவி முழுவிப்[27] புகுந்து என்னைச் * சுற்றிச் சுழன்று போகானால் **
தழையின் பொழில்வாய் நிரைப் பின்னே * நெடுமால் ஊதி வருகின்ற *
குழலின் தொளை வாய் நீர் கொண்டு * குளிர முகத்துத் தடவீரே 5

632 நடை ஒன்றில்லா உலகத்து * நந்தகோபன் மகன் என்னும் *
கொடிய கடிய திருமாலால் * குளப்புக் கூறு கொளப்பட்டு **
புடையும் பெயரகில்லேன் நான் * போட்கன் மிதித்த அடிப்பாட்டில் *
பொடித் தான் கொணர்ந்து பூசீர்கள் * போகா உயிர் என் உடம்பையே 6

633 வெற்றிக் கருளக் கொடியான் தன் * மீமீதாடா உலகத்து *
வெற்ற வெறிதே பெற்ற தாய் * வேம்பேயாக வளர்த்தாளே **
குற்றமற்ற முலை தன்னைக் * குமரன் கோலப் பணைத் தோளோடு *
அற்ற குற்றம் அவை தீர * அணைய அமுக்கிக் கட்டீரே 7

---

[26] போலப்

[27] முழுசி

634 உள்ளே உருகி நைவேனை * உளளோ இலளோ என்னாத *
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக் * கோவர்த்தனனைக் கண்டக்கால் **
கொள்ளும் பயன் ஒன்றில்லாத * கொங்கை தன்னைக் கிழங்கோடும் *
அள்ளிப் பறித்திட்டு அவன் மார்வில் எறிந்து * என் அழலை தீர்வேனே 8

635 கொம்மை முலைகள் இடர் தீரக் * கோவிந்தற்கு ஓர் குற்றேவல் *
இம்மைப் பிறவி செய்யாதே * இனிப் போய்ச் செய்யும் தவம் தான் என்? **
செம்மை உடைய திருமார்வில் * சேர்த்தானேலும் ஒரு ஞான்று *
மெய்ம்மை சொல்லி முகம் நோக்கி * விடை தான் தருமேல் மிக நன்றே 9

636 * அல்லல் விளைத்த பெருமானை * ஆயர்பாடிக்கு அணிவிளக்கை *
வில்லி புதுவை நகர் நம்பி * விட்டுசித்தன் வியன் கோதை **
வில்லைத் தொலைத்த புருவத்தாள் * வேட்கை உற்று மிக விரும்பும் *
சொல்லைத் துதிக்க வல்லார்கள் * துன்பக் கடலுள் துவளாரே 10

**அடிவரவு:** கண்ணன் பால் கஞ்சை ஆரே அழில் நடை வெற்றி உள்ளே
கொம்மை அல்லல் பட்டி

---

### ஆண்டாள் அருளிச் செய்த
## நாச்சியார் திருமொழி 14 - பட்டி மேய்ந்து
### (விருந்தாவனத்தே பரமனைக் கண்டமை கூறுதல்)

637 * பட்டி மேய்ந்தோர் காரேறு * பலதேவற்கு ஓர் கீழ்க் கன்றாய் *
இட்டீறிட்டு விளையாடி * இங்கே போதக் கண்டீரே? **
இட்டமான பசுக்களை * இனிது மறித்து நீரூட்டி *
விட்டுக் கொண்டு விளையாட * விருந்தாவனத்தே கண்டோமே 1

638 அனுங்க என்னைப் பிரிவு செய்து * ஆயர்பாடி கவர்ந்துண்ணும் *
குனுங்கு நாறிக் குட்டேற்றைக் * கோவர்த்தனனைக் கண்டீரே? **
கணங்களோடு மின்மேகம் * கலந்தாற் போல வனமாலை *
மினுங்க நின்று விளையாட * விருந்தாவனத்தே கண்டோமே 2

639 மாலாய்ப் பிறந்த நம்பியை * மாலே செய்யும் மணாளனை *
ஏலாப் பொய்கள் உரைப்பானை * இங்கே போதக் கண்டீரே? **
மேலால் பரந்த வெயில் காப்பான் * வினதை சிறுவன் சிறகென்னும் *
மேலாப்பின் கீழ் வருவானை * விருந்தாவனத்தே கண்டோமே 3

640 கார்த்தண் கமலக்கண் என்னும் * நெடுங்கயிறு படுத்தி[28] * என்னை
ஈர்த்துக் கொண்டு விளையாடும் * ஈசன் தன்னைக் கண்டீரே? **

---

[28] படுத்து

போர்த்த முத்தின்குப்பாயப் * புகர்மால் யானைக் கன்றே போல் *
வேர்த்து நின்று விளையாட * விருந்தாவனத்தே கண்டோமே 4

641 * மாதவன் என் மணியினை * வலையில் பிழைத்த பன்றி போல் *
ஏதும் ஒன்றும் கொளத்தாரா * ஈசன் தன்னைக் கண்டீரே? **
பீதக ஆடை உடை தாழப் * பெருங்கார் மேகக் கன்றே போல் *
வீதியார வருவானை * விருந்தாவனத்தே கண்டோமே 5

642 தருமம் அறியாக் குறும்பனைத் * தன் கைச் சார்ங்கம் அதுவே போல் *
புருவ வட்டம் அழகிய * பொருத்தமிலியைக் கண்டீரே? **
உருவு கரிதாய் முகம் செய்தாய் * உதயப் பருப்பதத்தின் மேல் *
விரியும் கதிரே போல்வானை * விருந்தாவனத்தே கண்டோமே 6

643 பொருத்தம் உடைய நம்பியைப் * புறம்போல் உள்ளும் கரியானை *
கருத்தைப் பிழைத்து நின்ற * அக்கருமா முகிலைக் கண்டீரே? **
அருத்தித்தாரா கணங்களால் * ஆரப் பெருகு[29] வானம் போல் *
விருத்தம் பெரிதாய் வருவானை * விருந்தாவனத்தே கண்டோமே 7

644 வெளிய சங்கொன்றுடையானைப் * பீதக ஆடை உடையானை *
அளிநன்குடைய திருமாலை * ஆழியானைக் கண்டீரே? **
களிவண்டு எங்கும் கலந்தாற் போல் * கமழ்பூங் குழல்கள் தடந்தோள் மேல் *
மிளிர நின்று விளையாட * விருந்தாவனத்தே கண்டோமே 8

645 * நாட்டைப் படை என்று அயன் முதலாத்[30] தந்த * நளிர் மாமலர் உந்தி *
வீட்டைப் பண்ணி விளையாடும் * விமலன் தன்னைக் கண்டீரே? **
காட்டை நாடித் தேனுகனும் * களிறும் புள்ளும் உடன் மடிய *
வேட்டையாடி வருவானை * விருந்தாவனத்தே கண்டோமே 9

646 * பருந்தாட் களிற்றுக்கு அருள் செய்த * பரமன் தன்னை * பாரின் மேல்
விருந்தாவனத்தே கண்டமை * விட்டுசித்தன் கோதை சொல் **
மருந்தாம் என்று தம் மனத்தே * வைத்துக் கொண்டு வாழ்வார்கள் *
பெருந்தாள் உடைய பிரான் அடிக் கீழ்ப் * பிரியாதென்றும் இருப்பாரே 10

**அடிவரவு:** பட்டி அனுங்க மால் கார்த்தண் மாதவன் தருமம் பொருத்தம்
வெளிய நாட்டை பருந்தாள் இருள்

**ஆண்டாள் திருவடிகளே சரணம்**

[29] பருகு
[30] தன்னைத்